# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 துலை (15-11-1988) ஓர் உருபா (இதழ் எண்: 112)


## இந்திராவையும் இராசீவையும் நாம் அன்றைக்கே தமிழினப் பகைவர்கள் என அடையாளம் காட்டினோம்.

## இன்றைக்குத்தான் தமிழினத் தலைவர்கள் உணர்கிறார்கள்!

**இப்பொழுதும் சொல்கிறோம். எல்லாருமே ஒன்றிணைந்து ஒரே குரலில் தமிழக விடுதலைக்குரல் எழுப்ப வில்லையானால், தமிழினத்தை அழித்து விட்டுத்தான் இராசீவ் வேறுவேலை பார்ப்பார்!**

**அரசியலைத் தூக்கி எறியுங்கள்! வேற்றுமையை அகற்றுங்கள்! தில்லி அரசியல் நம்மை அடிமை-யாகவே வைத்திருக்கும்! தமிழ்நாட்டு விடுதலையே உரிமை அரசியலை மீட்டுக் கொடுக்கும்!** (தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

மடல்: 4

மதுரை நடுவண் சிறை,
26-8-88.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கங்கள். தங்களின் மடல் 22-ஆம் பக்கல் கிடைத்தது. படித்து மகிழ்வுற்றோம். தங்களின் ஓய்வற்ற அருந்ததமிழ்த் தொண்டை எம் கண்முன் கண்டு மனம் நெகிழ்ந்து கொண்டிருப்பதல்லாமல் வேறொன்றும் செய்ய இயலாமல் நிற்கிறேன்.

இன்றைய மக்களின் விடுதலைக்காக அல்லும் பகலும் எவ்வகை அடிப்படை ஏந்தும் இல்லாமல் தொண்டாற்றிக் கொண்டிருக்கும் தங்களின் பணியில் ஓர் இம்மி கூட, பொதுநல உணர்வில்லாமல் பணம் சுரண்டிக் கொழுப்பது ஒன்றே தம்மின் அனைத்துச் சிந்தனையும், செயலுமாய் இருக்கின்ற அரசு குறுக்கிடுவதை எண்ணி, அதிர்ச்சி கொள்ளவே வேண்டியுள்ளது. மக்களிடையே நாடக, நடிக நிலையில் வேறுரு(வேடம்) புனைந்து ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசு எந்திரம், உண்மையான மக்கள் தொண்டர்களுக்கு உதவா விட்டாலும் தாழ்வில்லை; தொல்லை வேறு கொடுக்கின்ற திமிர்த்தனத்தை எண்ணிக் கொதிப் படைகின்றோம். மேலிடத்திலிருந்து ஆணை வருவதாய்க் கூறிக் கூலி வேலை செய்து கொண்டிருக்கும், இத் தமிழ் நாட்டுக் கூலிக் காவல் படையினரின் இனம் மறந்த செயல்களை — நடுநிலை மறந்த செயல்களை எண்ணி, என்னவென்று பழித்துரைப்பது என்று விளங்கவில்லை. ஏது எவ்வாறாயினும் உண்மைக்கு அழிவில்லை. உண்மை வெல்லத்தான் செய்யும் எனும் தென்போடும், உறுதியோடும் தங்களின் அருந்தமிழ்த் தொண்டு தொடர்ந்து நடக்க வேண்டுமாய் அன்புடன் கூறிக் கொள்கிறோம். அத்தொண்டிற்குத் துணைத் தோள்களாய் முட்டுக் கொடுக்க இத் தமிழின இளைஞர்களை என்றும் எப்பொழுதும் திரட்டுவோம் என உறுதியளிக்கிறோம். நிற்க.

திரு. இராமதாசு அவர்கள் 22-ஆம் பக்கல் கொடைக்கானல் வந்திருந்தார்கள். பிணையலுக்குக் கடுமையாக முயற்சி செய்து கொண்டுள்ளார்கள். திரு. செல்வமோ, திரு. இளங்கோவோ எங்களை வந்து, அதன் பிறகு சந்திக்கவில்லை.

தாங்கள் அனுப்பிய **தென்மொழி, தமிழ்ச்சிட்டைக்** கொடுத்தார்கள். **தமிழ்நிலம்** கொடுக்கவில்லை..... இம்முறை வழக்கு மன்றம் செல்கையோடு மூன்று திங்கள் முடிவுறுவதால் திரு. ஈகை, திரு.இளமுருகு இருவர்க்கும் பிணையல் கிடைக்கலாம் என எதிர் நோக்குகிறோம். மற்றபடி நிறைவாகவே காலத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்; தங்களின் நெல்லைச் செலவு மிகவும் மகிழ்வளிக்கிறது. தாங்கள் எங்களை வந்து காண வேண்டாம் எனக் கருதினும், தாங்கள் மதுரையைத் தொட்டுச் செல்வதே எங்கட்குப் பெருநிறைவாய் உள்ளது. அச்சகப் பணியாளர்கள் அமைவுடன் பணியாற்ற வேண்டுமாய் எண்ணுகிறேன். எங்களுக்கு அடுத்த வழக்குச் செல்கை நாள் 5-9-88. பிற செய்திகளை உடனே எழுதுகிறேன். தங்களின் அருந்தமிழ்த் தொண்டு தொய்வின்றி நடக்க ஆழ்ந்து எண்ணுகிறோம்.

அன்புமகன், **பொழில்.**

அம்மா !

உங்களின் 17, 19, 22-ஆம் பக்கல் மடல்கள் முறையே கிடைத்தன. செந்து மடலும் கிடைத்தது. செய்திகளை அறிந்து கொண்டோம். நீங்கள் எந்த ஒரு நிலையிலும் கவலைப்பட வேண்டாம். பொழிலன் மட்டும் உங்கள் பிள்ளையில்லை. நாங்கள் எல்லாரும் சிறையில் உள்ள பொழுது கூட, அங்கு வந்து துணையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அவ்வருந்தமிழ் - இளைஞர்களைப் பார்ப்பதில், பேசுவதில், அவர்களுக்குப் பணி கொடுப்பதில் அவர்களும் உங்கள் பிள்ளைகள்தாம். எனவே கவலையே பட வேண்டாம்.

நாங்கள் இங்கு மிக மகிழ்வாக உள்ளோம். எவ்வகைத் தொல்லையும் இல்லை. காலம் வீணாகின்றதே என்பது தவிர வேறெதுவும் இல்லை. உணவு சிறப்பாக உள்ளது. இப்பொழுது எல்லாம் எங்களின் நடைமுறையைக் கண்டு, அதிகாரிகள் எங்களுக்கு முழு உரிமை கொடுத்துள்ளனர். இரவில் மட்டுந்தான் பூட்டி வைக்கின்றனர். திரைப்படம் கூடக் காட்டுகிறார்கள். முதலில் எல்லாம் திரைப் படத்திற்கு இசைவில்லை. இப்பொழுது திரைப்படம் பார்த்தோம். 'அந்தமான் காதலி' — நாங்கள் சேலத்தில் பார்த்த அதே படம். எனவே இங்கு நாங்கள் இருப்பது பற்றி எவ்வகையிலும் கவலைப் பட வேண்டாம்.

இங்கு இருந்தாலும் சென்னை நிகழ்ச்சிகளை ஓரளவு படித்துக் கொண்டுதான் உள்ளோம். எங்களுக்கு இங்கு 15 நாளுக்கு ஒருமுறை ஓர் (அஞ்சல்) அட்டை கொடுக்கிறார்கள். எனவே மடல் தொடர்ந்து எழுத இயலவில்லை. நீங்கள் வரும்பொழுதோ அல்லது திரு. தென்னவன் அவர்கள் பார்ப்பதாக அப்பா அவர்கள் எண்ணுவார்களாயின் அவர் வழியோ, அங்கு என் மிசை மீதுள்ள 'Theasarus' (ஆங்கிலச் சொல்லடைவு) நூலும், சிறிய அகர முதலி (உள்ளே சில படங்கள் போடப்பட்டு, ஆங்கிலம் - ஆங்கிலம் உள்ளது.) நூலும் அனுப்பும் படியும், Renold — தூவல் (கோலிமுனைத்தூவல்) இரண்டோ மூன்றோ வாங்கி அனுப்பும்படியும் கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி பொருள்கள் எதுவும்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# இனமான உணர்வைக் கலைஞர், வீரமணி, நெடுமாறன், கலிவரதன், நெடுஞ்செழியன், சானகி, செயலலிதா, வீரப்பன், காளிமுத்து, இரா. செழியன், சோமசுந்தரம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குரலில் எழுப்ப வேண்டும்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அன்று, தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி ஆட்சியிலிருந்த பொழுது, இந்திராவை, வலிவு படுத்தி ஆதரித்துக் கை கொடுத்ததை, கலைஞர் இன்றைய நிலையில் மறந்திருந்தாலும், தமிழக வரலாறு என்றென்றும் மறவாது; மன்னிக்கவும் செய்யாது. தாம் எதையுமே சரியாக எண்ணிச் செய்வதாகவே நினைத்துக் கொண்டு செய்யும் கலைஞரின் வரலாற்றுப் பிழைகளுள் இதுவும் ஒன்றாகும். அன்று காமராசரைப புறந்தள்ளினர். இந்திராவை ஏடுத்துப் போற்றினர். இப்பிழையை, இந்திரா ம.கோ.இரா.வை ஆதரித்த பொழுதுதான் உணர்ந்து விழித்துக் கொண்டார். இந்திராவுக்குக் கலைஞரும் ஒருவர் தாம்; ம கோ. இரா.வும் ஒருவர்தாம். எவரிடம் தமிழக மக்களைத் தமக்குச் சார்பாகத் திரட்டி ஆற்றுப்படுத்தும் ஆற்றல் மிகுதியாக உள்ளதோ, அவரையே இந்திரா, தன் நிலைமையை வலுப்படுத்திக் கொள்ள ஆதரிப்பார் என்னும் உண்மை கலைஞருக்கு மிகவும் பிந்திக் காலத்திலேயே விளங்கியது.

அதே போல், காமராசரும், இந்திரா தாம் தலைமையமைச்சுப் பதவி ஏற்கவும், தம்மைப் பெரு வலிவு படுத்திக் கொள்ளவும் தொடக்கத்தில் தம் முழுத்துணையையும் தந்து விட்டுப், பின்னர் அவரால் தாம் அனைத்திந்திய அளவில் புறக்கணிக்கப் பட்ட பொழுது, தாம் செய்த பெரும் பிழையை உணர்ந்து வருந்தித் தாம் அரசியலில் மீண்டும் ஈடேறுமலேயே மறைந்தார்.

இதே பிழையைக் கலைஞருக்குப் பின்னர் தமிழக ஆட்சிக் கட்டிலேறிய ம. கோ. இரா.வும் தம் இறுதிக்காலம் வரை தொடர்ந்து செய்து வந்து, இந்திராவோ அவருக்குப் பின்வந்த இராசீவோ, தம்மைப் புறக்கணிப்பதற்குமுன் தம் பிழையை உணராமலேயே மறைந்து போனார். ஆனால், அப் பிழையை அவருக்குப் பின்வந்த திருவாட்டி. சானகி ம. கோ. இரா. வும் அவரின் உள்முகச் சாணக்கியர் வீரப்பனும் பின்னர் உணர்ந்து வருந்த வேண்டியவர்களானார்கள்.

இவ் வகையில்தான், தமிழகத்திலுள்ள பிற சிறிய அரசியல் கட்சியினரும் கூட, இந்திரா அளவிலோ, இந்திராப் பேராய அளவிலோ முன்னர் செய்து விட்ட பிழைகளுக்காகப் பின்னர் இத் தமிழக மக்களை எண்ணி மிகவும் வருந்தி உணர்ந்திருக்கின்றனர். நெடுமாறனும் அப்படித்தான்; இரா. செழியனும் அவ்வாறுதான்; கலிவரதனும் அன்னவர்தாம்.

இனி, இந்திராவையும், இந்திராப் பேராயத்தையும், இராசீவையும் நம்பித், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒருவகை வெற்றியைப் பெற்று விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்த விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும், பிற போராளிக் குழுக்கள் தலைவர்களும் கூடத் தத்தம் பிழைகளைப் பின்னர் உணரத் தொடங்கினர்.

அடுத்து, தமிழக அரசியல் களத்தில், எத்தனையோ தப்பு விளையாட்டுகளை விளையாடி, இறுதியில் செயலலிதாவின் பணநிழலைப் பற்றியிருக்கும் திரு. சோமசுந்தரம் கூட, அண்மையில் ஓர் அறிக்கையில் இராசீவின் தமிழின இரண்டகச் செயலை ஆய்ந்து கண்டுபிடித்துக் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

ஆனால், இந்நிலைகளை யெல்லாம் முன்னரே வரலாற்றடிப் படையில் கணித்துக் கூறி, **இந்திராவையும் இராசீவையும் தமிழினத்தின் பகைவர்கள்** என அடையாளங் காட்டிய பெருமை **தென்மொழிக்கும் தமிழ்நிலத்துக்குமே** உண்டு என்பதை, அவ்விதழ்களின் வாசகர்களும் அறிவார்கள்; நடு நிலையாக எண்ணிப் பார்ப்பின் முன் சுட்டிய தலைவர்களும் உணர்வார்கள். கலைஞரோ தம் விருப்பு வெறுப்புகளை அகற்றிக் கொண்டு, யார் பெரியவர் யார் சிறியவர் என்று எடையிட்டுப் பார்க்கும் மயக்க வுணர்வையும் தவிர்த்து விட்டு, எண்ணிப் பார்ப்பாரானால்,அவருக்கும் புலப்படாமல் போகவே போகாது.

இனி, அன்றைக்கு மட்டுமன்று, இன்றைக்கும் இப்பொழுதும் சொல்கிறோம், தமிழினத்திற்கு இரண்டகம் மட்டுமன்று, இதையே அழிக்கின்ற தன்மையில், இந்திராவை விடவும் இராசீவ் பல மடங்கு கொடுமை மிக்கவராகவே விளங்குகிறார். தமிழகத்தலைவர்கள் எல்லாருமே ஒன்றிணைந்து ஒரே குரலில் தமிழக விடுதலைக்குரல் எழுப்பவில்லையானால் தமிழினத்தை அழித்து விட்டுத்தான் இராசீவ் வேறு வேலை பார்ப்பார்!

இன்னொன்றையும் இங்கு நினைவூட்டுகிறோம். காமராசர் காமராசர் என்று மூச்சுக்கு முந்நூறு

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முன் இதழ்த் தொடர்ச்சி)

# தில்லி அரசுக்கொரு திறந்த மடல்.

அது மட்டுமல்லாமல் தாங்கள் தற்போது செய்துள்ள 59-ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின்படி 359- இல் A-பிரிவு இணைக்கப்பட்டுள்ளதானது, எம்மைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இது இந்திய ஒன்றியத்தில் இணைந்து வாழும் எமக்கும், எம்மோடு இணைந்திருக்கும் பிற தேசிய இன மக்களுடைய குடிநாயக உரிமைகளுக்கும் எதிரானதாகும். இப்பிரிவும் 59-ஆவது சட்டதிருத்தமும் எமக்கு இந்திய ஒன்றியத்தில் உள்ள அரசியல் உரிமைகளைப் பறிப்பதுடன் மட்டுமல்லாது எமது பேச்சுரிமை, எழுத்துரிமை, எடுத்துக்கூறும் உரிமை ஆகியவற்றையும் பறித்தெடுப்பதாகவே அமைந்துள்ளது. இதை நாங்கள் "இந்தியன் நடுவணரசின் கொடுங் கருப்புச் சட்டமாகவே" கருதுகின்றோம். இச்சட்டத் திருத்தத்தை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது. இதைத் தங்கள் தலைமையிலுள்ள நடுவண் அரசு உணர்ந்து பின்வாங்கிக் கொண்டு நீக்கம் செய்து குடிநாயக மரபுகளைக் காக்க வேண்டுமென்பதையே நாங்கள் விரும்புகின்றோம்.

நாங்கள் இந்திய ஒன்றியத்தில் வாழ்ந்து வரும் ஓர் உறுப்பான தேசிய - இன - மக்கள் என்பதை இங்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். உலக அரங்கில் எமக்குள்ள உரிமைகளும், எம்மோடு இந்திய ஒன்றியத்தில் உள்ள பிற தேசிய இன மக்களுடைய உரிமைகளும் இந்திய அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் விரும்புகின்றோம். அவ்வகையில் இந்திய அரசியலமைப்புத் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதையும் இங்கு முன்வைக்க விரும்புகின்றோம். எனவே பின்வரும் வகையில் இந்திய அரசியலமைப்பு திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

1. இந்திய அரசியலமைப்பு முற்று முழுதாகத் திருத்தப்பட்டு மறுவார்ப்பு செய்யப படுதல் வேண்டும். அதில் இந்தியா ஒரு கூட்டரசு என்றும், பல தேசிய இனங்களின் அரசுகளைக் கொண்ட ஒரு கூட்டமைப்பு எனவும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2. தற்போதுள்ள பாராளுமன்ற ஆட்சிமுறை முழுவதுமாக விலக்கப்படல் வேண்டும். மாறாக, ஒவ்வொரு தேசிய அரசுகளினுடைய படிநிகராளிகளடங்கிய கூட்டரசு முறை பின்பற்றப்படல் வேண்டும். தேசிய அரசுகள் கூட்டரசிலிருந்து பிரிந்துபோக விரும்பினால் பிரிந்து போகும் உரிமை வலியுறுத்தப்படல் வேண்டும்.

3. இந்திய ஒன்றியக் கூட்டரசு இப்போதுள்ள நடுவண் அரசு போல் ஒரு தேசிய அரசு நிலையில் செயற்படுவது முற்றிலுமாக விலக்கப்படல் வேண்டும். ஒன்றியக் கூட்டரசு தேசங்களுக்கிடையேயான கூட்டுறவையே மேற்கொள்ள வேண்டும். மாறாகத் தேசிய அரசுகளின் அரசியல் உரிமைகளில் தலையிடுவது நிறுத்தப்படல் வேண்டும்.

4. தற்போது மாநில அரசுகளாக உள்ள தேசிய இனங்களின் அரசு எல்லைகள் மறுவரைவு செய்யப்படுதல் வேண்டும். தேசிய இனங்களின் அரசுகளினிடத்தில் அந்தந்தத் தேசிய இனங்களின் அரசியல் தன்னுரிமை இருக்க வேண்டும்.

5. தேசிய அரசுகள் இயற்றும் சட்டங்களுக்குத் தற்போது இந்திய அரசுத் தலைவரிடம் ஒப்புதல் பெறுதல் போன்ற முறைகள் முற்றிலுமாக விலக்கப்படுதல் வேண்டும். மாறாக ஒவ்வொரு தேசிய - இன - அரசும் தத்தம் தேசியத் தன்மைகளுக்கேற்ப சட்டங்களை இயற்றிக் கொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் உரிமை பெற்றனவாக இருக்கவும் வலியுறுத்தப்படவும் வேண்டும்.

6. இந்தியக் கூட்டரசுக்குத் தற்போதைய சட்ட அமைப்பில் இருப்பது போன்று அலுவல் மொழியாக இந்தி மொழி பயன்படுத்தும் நிலை முற்றிலுமாக விலக்கப்படுதல் வேண்டும். மாறாக ஒவ்வொரு தேசிய அரசும் தத்தம் தேசிய மொழியையே ஆட்சி மொழியாகப் பயன்படுத்திக் கொள்ளும் முறையும், கூட்டரசின் பயன்பாட்டுக்கு ஆங்கிலத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் முறையும் வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

7. இந்தியக் கூட்டரசில் தற்போதுள்ள நடுவண் அரசு மாநில அரசுகளுக்கு அமர்த்தும் ஆளுநர் முறை முற்றிலுமாக விலக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு தேசிய அரசும் தங்களுக்கென்று ஓர் அரசுத் தலைவரைத் தானே மேற்கொள்ளும் தேர்தல் முறைகளினால் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் குடிநாயக முறை நடைமுறைக்கு வரும் வகை செய்யப்படல் வேண்டும். அவ்வகையில் ஒவ்வொரு தேசிய இனத்தின் - தேசத்தின் - தானே தீர்மானிக்கும் உரிமையாகிய 'சுய நிர்ணய உரிமை' பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

இவ்வகையில் அமைந்த இந்திய ஒன்றியத்தையே — கூட்டரசையே தமிழர்களாகிய நாங்கள் விரும்புகின்றோம். இவ்வாறு இந்தியா ஒரு கூட்டரசாக செயல்படுவது மட்டுமே தெற்காசியப் பகுதியில் இந்திய ஒன்றியம் ஓர் ஒருமைப்பாடு மிக்க நாடாக விளங்க முடியும் எனவும் உறுதியாக நம்புகிறோம்.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

# இட ஒதுக்கீடு -- ஒரு கண்ணோட்டம்.

-- தமிழ்நில வேட்பன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் இட ஒதுக்கீடு என்பது பற்றித் தெரியாதவரே இருக்க முடியாது.

தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு சாதியினரும் தமக்கெனக் கல்வியிலும்,வேலை வாய்ப்புகளிலும் சம அளவிலான பங்கு தேவை எனப் போராடத் தொடங்கியுள்ளனர்.

அப் போராட்டம் இன்றைக்குப் பெரியாரின் வகுப்புரிமைப் போர்வையைப் போர்த்திக் கொண்ட சாதிக் கலவரங்களாகவே நடை பெறுகின்றன என்பது கண்கூடு.

சாதியச் சண்டைகளாகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் ஆன சண்டை நாளுக்கு நாள் தமிழ்நாட்டில் வளர்ந்து கொண்டே வருகிறது.

இதைப் பார்த்து நாம் சிலவற்றில் தெளிவடைய வேண்டுவது கட்டாயமாகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பார்ப்பனர்களின் ஆளுமை கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் நிரம்ப அடைத்துக் கொண்டு உள்ளதைக் கண்டித்து வகுப்புரிமைப் போராட்டத்தைத் தொடங்கியவர் தந்தை பெரியார் அவர்கள்.

அன்றைக்கு இதே போராட்டத்தை மராட்டியத்திலும், பிற இந்தியத் துணைகண்டப் பகுதிகளிலும செய்தவர் அம்பேத்கார் ஆவார்.

இருவரும் ஒரு காலகட்டத்தில் பல மாறுபட்ட வகைப் போராட்டங்களின் மூலமாகப் பார்ப்பன ஆளுமையைத் தம் தம் இறுதிக்காலம் வரை எதிர்த்துப் போராடியவர்கள்.

அந்தக் கால கட்டத்தில் பார்ப்பன ஆளுமை அழுத்தம் கல்வி, வேலை வாய்ப்புகளில் இருந்ததை எதிர்த்து இம் மேற்படி போராட்டங்களும், வகுப்புரிமைப் போராட்டமும் நடத்தப்பட்டன. அம்பேத்கார் அவர்களால் இந்திய அரசியல் சட்டத்திலும் அச் சலுகைகளைச் செய்ய முடிந்தது.

அப் போராட்டங்களால் சட்டங்கள் வழியாக முழுமையான பயன் இல்லாவிட்டாலும், ஓரளவில் தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் ஆன இட ஒதுக்கீடு கிடைத்ததை மறுக்க முடியாது.

ஆனால்,இந்தியாவையோ, தமிழ் நாட்டையோ பொறுத்த அளவில் இவ்விழுக்காட்டு அடிப்படையில் படிக்க முடிகிறபடியான பொருளியல் அடித்தளம், ஏழை எளிய மக்களிடம் இல்லை.

ஒன்று படிக்கவைக்கப் பணம் இல்லை; அல்லது உதவித் தொகை பெற்றுப் படிக்க வைக்சலாம் என்றால் தம் குடும்பத்தை நிலை நிறுத்த வேண்டிய ஒருவரைப் படிப்பில் ஈடுபடுத்த இயலவில்லை. இப்படி ஒன்றுக்கொன்று முரணான சிக்கல்கள் ஏழை எளிய மக்களை அப் பயனை நுகரமுடியாத அளவு பின் தள்ளியே வைக்கிறது.

இதனால், அந்த அந்தச் சாதிகளில் உள்ள பணக்காரனோ, அல்லது நடுத்தரக் குடும்பத்தினனோ மட்டும் அப் பயனைச் சுரண்டிக் கொண்டு போக நேர்கிறது.

ஆக, சாதிய அமைப்பில், முன்னேறிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியப் பெரும் பகுப்புகளிலே உள்ள ஒவ்வொரு சாதியிலும் வகுப்புகளாகப் பல முரண்பாடுகள் உள்ளுக்குள்ளேயே நிகழ்கின்றன.

தன் பொருளியல் வசதி இல்லாத ஓர் ஏழைப் பிற்படுத்தப்பட்டவன். அஃதாவது வன்னியனோ, கள்ளனோ, மறவனோ, கவண்டனோ — பிறனோ, தன் கல்வி வாய்ப்பின்மைக்கோ, வேலை வாய்ப்பின்மைக்கோ, ஏதோ சிறிது பொருளியல் வசதி பெற்றுக் கல்வியிலோ, வேலைவாய்ப்பிலோ அமர்கிற தாழ்த்தப்பட்டவனே. அஃதாவது பள்ளனோ, பறையனோதான் தனக்குச் சேர வேண்டிய வாய்ப்பைப் பிடுங்கிக் கொண்டான் என்றும், அவனே தனக்கு எதிரி என்றும் தாக்குகிறான். அல்லது,

இட ஒதுக்கீடு என்பதே தனக்குத்தான்; நாம் தாம் ஏழையாக இருக்கிறோம் என எண்ணுகிற தாழ்த்தப்பட்ட ஏழையர் தமக்குச் சேரவேண்டிய வாய்ப்பைத், தாங்கள் காணுகிற பணவாய்ப்புள்ள, நடுத்தர வகுப்பினமாக உள்ள பிற்படுத்தப்பட்டவர்கள் கேட்டுப் பறிக்கிறார்கள் எனக் கருதி அவர்களை எதிரியாக உறுதிசெய்து தாக்குகிறான்.

ஆக — இதில் புலப்படும் உண்மை ஒன்று உண்டு. தங்கள் தங்கள் சிற்றூர்ப் புறங்களில் தங்கள் தங்களுக்கு யார் எதிரியாகப் பெரும்பான்மையாகச் சுரண்டுகிறார்களோ, பிற எதிர் நிலைச் செயல்பாடுகளைக் கைக் கொள்கிறார்களோ, அவரவர்களை,அவரவர்கள் எதிரியாக எண்ணிக் கனன்று கொண்டிருக்கின்றனர்.

அப்படிப்பட்ட நிலையில், தமிழ் நாட்டில் — வட தமிழ் நாட்டில் —

சிற்றூர்ப்புறங்களில் தங்கள் தங்களுக்குள் முரண்பட்ட எதிரிகளாக, வன்னியர்களாகிய பிற்படுத்தப்பட்டோரும், பறையராகிய தாழ்த்தப் பட்டோரும் சண்டையிட்டு வெட்டி மடிவதும்,

தென் தமிழ்நாட்டில்,

சிற்றூர்ப் புறங்களில் தங்கள் தங்களுக்குள்

Scanned with CamScanner

முரண்பட்ட எதிரிகளாகக் கள்ளர்களாகிய பிற்படுத்தப்பட்டோரும், பள்ளராகிய தாழ்த்தப் பட்டோரும் சண்டையிட்டு வெட்டி மடிவதும்,

பிற எஞ்சிய பகுதிகளிலும்,

ஏறத்தாழ இதே அடிப்படையான நிலையிலும் தமிழ்நாடு அக முரண்பாட்டில் சீரழிந்து கொண்டிருப்பதும் தெளிவாகத் தெரிகிற ஒன்று.

இந்நிலையில், பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்காகட்டும், தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்காகட்டும், தங்களின் ஏழ்மைக்கு எது காரணம் என விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒவ்வொருவரும், தம்தம் சாதிக்காரரே தமக்கு உதவி செய்ய முடியும். தம் ஏழ்மைத் தனத்தைப் போக்க முடியும் என உறுதியாக நம்புகின்றனர்.

எனவே, தன் சாதி அல்லாத, அடிப்படையில் தம் சிற்றூர்ப்புறத்தில் முரண்பட்டுள்ள சாதியே எதிரி என்றும் உறுதியாக நம்புகின்றனர்.

இந் நிலையில் இடஒதுக்கீடு — என்று அவ்வேழை மக்களிடம் கருத்துப் பரப்பப்படும் பொழுது, அவனுக்கு மிக மகிழ்வு தருவது - தம் சாதியெல்லாம் ஒன்றிணைந்து போராடுவது என்பதே.

எனவே அச்சாதியக் கட்டமைப்பில் இணைகின்றனர். ஆகவே தம் ஏழ்மையை விரட்டும் கருவி என்று நம்புகின்றனர். தம் சாதியினர் தம்மை ஏமாற்ற மாட்டார் என உறுதியாகின்றனர். சாதிய உறவு அடிப்படையில், தம் சாதியிலேயே ஏழ்மை நிலையில் உள்ள தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவ்வேலைவாய்ப்பு உண்டு என்பது கற்பனை என்றோ, கல்விவாய்ப்பு உண்டு என்பது கற்பனை என்றோ ஆழச் சிந்திக்க முடிவதில்லை.

தம் சாதியைச் சேர்ந்தவர் நமக்குக் கல்வி, வேலைக்காக நம் ஏழ்மையை விரட்டக் கூப்பிடுகிறார் என ஒன்று சேர்ந்து போராடுகின்றனர்.

அப்போராட்டத்தில் தம் ஊரைச் சேர்ந்த பிற சாதியினன் கலந்து கொள்ளாதது — அவனுக்கு மன அளவில் மிகப்பெரும் எரிச்சலைக் கொடுக்கிறது.

தன்னை விட ஏழையாக இருந்தாலும், அவன் தன்னை மதிப்பதில்லை என்றும், அவனே இதற்கு எதிரி என்றும் எண்ணித் தாக்குவதால் சாதிச் சண்டைகள் விரைந்து வளர்கின்றன.

ஆக, இடஒதுக்கீடு என்பது — அன்றைய பார்ப்பன ஆளுமை மட்டுமே நிறைந்திருந்த அன்றைய கால கட்டத்திற்குச் சரியானதாகக் கூட இருந்திருக்கலாம் —

இன்றைக்குச் சாதிய அளவில்லான முரண்பாடுகள் பார்ப்பனர்க்கும் — பார்ப்பனர் அல்லாதார்க்கும் இடையில் உள்ளன என்பதைவிட,

பார்ப்பனர்க்கும் —, பிற மேல்சாதியினர்க்கும், மேல்சாதியினர்க்கும் — பிற்படுத்தப்பட்டோர்க்கும் பிற்படுத்தப்பட்டோர்க்கும்- தாழ்த்தப்பட்டோர்க்கும்

— என்று பல வகையில் திரிந்து, தத்தமக்குள்ளாகவே முரண்பட்டுச் சண்டையிட்டுக் கொள்ளுகிற ஓர் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

இந் நிலையில், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம், பல்வேறு தேசிய இனமக்களைச் சிறைப்படுத்தி வைத்துக் கொண்டு, பிற தெற்காசிய நாடுகளில் விரிவாளுமையையும் செய்து வருகிற ஒரு துணை வல்லரசாக விளங்கி வருகிறது.

பஞ்சாப்,அசாம்,தமிழ்நாடு, தெலுங்கானு,வங்காளம், கேரளம், மராட்டியம், கன்னடம் — இப்படி பல தேசிய இனங்களும் தம் தனித்த வாழ்வியல் பண்புகளை, நாகரிகங்களை, கலை — பண்பாடுகளை, மொழியை வளர்க்க முடியாதவண்ணம் அனைத்தையும் பகுத்து வைத்து, அனைத்து இன நாட்டின் கனிவளங்களையும் சுரண்டிக் கொண்டு, வெளிநாட்டுச் சந்தைகளுக்குச் சுரண்ட இடம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அதுவும் அல்லாமல் இலங்கையில் தன் விரிவாளுமையைச் செலுத்தித் தமிழீழ மக்களைக் கொன்று குவிக்கிறது. கிழக்கு வங்காளமாய் இருந்த வங்க தேசத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்ததாகக் காட்டி, அதைத் தம் ஆளுமைக்குள் செருகிக் கொண்டது.

ஆக, இவ்வாளுமை கொண்ட இன்றை இந்தியத் துணைவல்லரசை, இணைய முடியாத கலையியல், பண்பாட்டு,மொழியியல் பிரிவுகளைக் கொண்ட வேறுபட்ட அழுத்தங்களைக்கொண்ட இத் தேசிய இனங்கள் ஒன்றிணைந்து போராடி தம் மக்களின் விடுதலையைப் பெறவே முடியாது.

மேலும் ஆளுகிற தேசிய இனச் சார்புடைய இந்தி தேசிய இன மக்கள்,இந்தியத் துணைவல்லரசு நிலைக்கு எதிராக எழுந்து போராடாதவரை, அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமை கொண்ட ஓரிந்திய விடுதலை ஒரு பகற்கனவே.

எனவே, இங்கு ஒவ்வொரு தேசிய இனமும், அதாவது எழுச்சிகொள்ளுகிற ஒவ்வொரு தேசிய இனமும், எழுச்சி பெறாத பிற தேசிய இன எழுச்சிக்குக் காத்திருக்காமல் போராடுதல் தேவையாகிறது.

ஒரு தேசிய இன எழுச்சி, பிற தேசிய இன அடிமைத்தனத்தை அம்மக்களுக்கு உணர்த்தும்.

ஒரு தேசிய இனப்போராட்டம், பிற தேசிய இனப் போராட்டத்தை ஊக்கப்படுத்தும்.

அவ்வகையில், இங்கு, தமிழ் நாட்டில் தமிழ் நாட்டு விடுதலைப் போராட்டம் என்பது தவிர்க்க முடியாதது மட்டும் அன்று, தள்ளிப்போட வேண்டியதும் கூடாததாகின்றது.

Scanned with CamScanner

இன்றைய முதன்மை எதிரியான இந்தியத் துணை வல்லரசுக்கு எதிரான போராட்டத்திற்கு அணி திரளுவது என்பதே முக்கியமானது.

அது அல்லாமல், இந்தியாவில் பார்ப்பனர் — பார்ப்பனர் அல்லாதார், இந்தியாவில் பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என எண்ணுவது, பேசுவது — குழப்பத்தின் உச்சக்கட்டமே அல்லாமல் வேறு அன்று.

ஆக, இன்றைய தேவை, 'தமிழன்' தன்னைத் தமிழனாக எண்ணித், தமிழ் நாடு மக்கள் போராட்டத் திற்கென நிற்பதுவே ஆகிறது.

எனவே, இந்நிலையில்,

'தமிழன்' — என்கிற உணர்வைத் தூண்டாமல், இவ்வின மக்களின் வாழ்வியல் உரிமையைப் பற்றி, அவ்வுரிமைக்கான புரட்சியைப் பற்றி எண்ண முடியாத உலகப் புரட்சிக்கு வித்திடக் கனவு காண்பவரும், இந்தியப்புரட்சி நடக்கப் போவதாகக் கனவு காண்பவரும், திராவிடப் புரட்சி என்கிற மாயையில் இருப்பவரும் — 'டிராட்சுகிய' (உலகம் முழுமையும் புரட்சிவரும் எனக் கனவு கண்ட உருசிய) சிந்தனையாளர்களே.

ஆக, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், தமிழ் மக்களை இன்றைக்குக் கடுமையாகச் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருக்கிற இந்தியத் துணை வல்லரசு, தமிழர்களை ஓர் இரண்டாந்தரக் குடிமக்களாக எண்ணி ஒதுக்கி வைத்துள்ளது என்பது உண்மை.

தமிழ்நாட்டுக் கன்னெய் (பெட்ரோல்) தமிழனுக்குஇல்லை. தமிழ்நாட்டு நிலவளப் பொருள்கள் தமிழனுக்கு இல்லை. தமிழ்நாட்டு மின்சாரம் தமிழனுக்கு இல்லை. தமிழ் நாட்டுக் கனிமப் பொருள்கள் ஏதும் தமிழனுக்கு இல்லை.

தமிழ் நாட்டுத் தமிழன் தன் தாய்மொழி, தமிழில் கூட படிக்க முடியாது; கூடாது — இப்படிப்பட்ட நிலையில் வாழ்வது இரண்டாந்தரக் குடி மக்களாக்குவதல்லாது வேறு என்ன?

இந்நிலையில், தமிழன் என்று தன்னை உணராமல், தமிழன்என்று ஒருமைப்பட்டு புரட்சி செய்ய இயலாதபடி,

—இந்தியத் துணைவல்லரசுதான்

தமிழின இந்தியன் என்றும்

— தமிழன் தன் நாட்டைத் தமிழ்நாடு - என்று சொல்வதைவிடுத்து 'இந்தியா' — என்று சொல்ல வைப்பதும்,

— தமிழன் தன் மொழியைத் 'தமிழ்' எனப் படிக்காமல், இந்தி எனப் படிப்பதுமாகச் செய்து கொண்டிருக்கிறது என்றால்,

— இந்தத் திராவிடக் கட்சிகளும்,

ஒருபக்கம்,தமிழனை — திராவிடன் — என்று அணிசேராத, சேர்க்க இயலாத தெலுங்கனை, கன்னடனை, மலையாளியை எல்லாம் இணைத்துக் கொண்டு புரட்சி எனக் கனவு காணுவதும்,

(— தெலுங்கனோ, கன்னடனோ, மலையாளியோ தன்னை அவனவனாகச் சொல்லிக் கொள்வதும், தன் இனத் தாழ்த்தப் பட்டோரை ஆதிதெலுங்கன், ஆதிகன்னடன் எனப் பறைசாற்றும் பொழுது, தமிழ்நாட்டில் மட்டும், திராவிடன் என்றும், தாழ்த் தப்பட்டோரை 'ஆதி திராவிடன்' — என்பதும் எத்துணைக் கண்மூடிப்பழக்கம்.)

இன்றைக்கு, தமிழன் ஒழிக, இந்தி ஒழிக என்று கன்னட இயக்கங்கள் தமிழன் மீதான தாக்குதலை நடத்திப், பல தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் பொழுதும், இப் பகல் கனவுப் புரட்சியாளர்கள் திராவிடம் — என்று கொக்கரித்துக் கொண்டிருப்பதும் வெட்கக்கேடு —

மறுபக்கம், தமிழனைப் - பள்ளனாக, பறையனாக, வன்னியனாக, கவண்டனாக, நாடானாக — மற்றும், அந்தந்தச் சாதியானாக எண்ண வைத்துச் சாதிக்காகச் சலுகை கேட்க வைக்கிற இந்த இழிநிலை இட ஒதுக்கீடு போராட்டமாக நடக்கிறது.

இன்றைய மூலமுரண்பாட்டை தமிழன் மீதான மூல அடிமைத்தனத்தை விலக்குகின்ற அடிப்படைச் சிந்தனையற்றவர்களாக உள்ளனர்.

— தன் நாட்டுரிமைக்காக ஈழமக்கள் ஒரு பக்கம் போராடித் தம் உயிரிழந்து அடைக்கலம் புகுகின்ற சூழலில்,

— தன் வாழ்வுரிமைக்காகக் கோலார், பெங்களூர், பம்பாய் வாழ் தமிழர்கள் தம் உயிரிழந்து போராடுகிற சூழலில்,

— தமிழகத் தமிழனும் போராடி உயிரிழக்கிறான். எதற்கு? தன்னை வன்னியன் என்றும், தன்னைப் பறையன் என்றும் — இன்னும் பலவாகவும் சொல்லிக் கொண்டு — பறைசாற்றிக் கொண்டு — அவ்வச் சாதி முன்னேற்றத்திற்காக நினைக்கவே இழிவாக இருக்கிறது.

இதற்கு அடிப்படையே இன்றைக்கு இருட்டுத் தனமான இந்த இட ஒதுக்கீடுதான். அதுவே — இன்றைக்கு,தமிழின உணர்வைக் கெடுத்துச்,சாதிய உணர்வை வளர்க்கிறது. சாதியநிலையில் தமிழர்களைத் தமக்குள் பகைமைப்படுத்துகிறது.

ஆக, இன்றைக்கு இந்தியத் துணை வல்லரசிடமிருந்து, தன்னைக் காத்துக்கொண்டு,

ஒரு தமிழ் மக்கள் நாயக அரசை அமைக்க வேண்டுமானால், ஒருவிடுதலை பெற்ற தமிழ் மக்கள் குடியரசை அமைக்க வேண்டுமானால்,

— தமிழன் தன் இன மக்களின் திரட்சியால், தன் குமுக, பொருளியல், அரசியல் அடிமைத் தனங்களை அறுத்து விடுதலைக்குப் பாடுபடல் வேண்டும்.

இன்றைக்குத் தமிழ் நாட்டில் உள்ள இந்திய அரசு அலுவலகங்களிலோ, பிற வானொலி, தொலைக் காட்சி நிலையங்களிலோ, எத்தனைப்பேர் பார்ப்பனர், எத்தனைப்பேர் பிற்படுத்தப்பட்டோர், எத்தனைப் பேர் தாழ்த்தப்பட்டோர் என்று பார்க்கிற ஒரு சிக்கலைவிட,

இன்றைக்குத தமிழ் நாட்டிற்கு எதற்கு இந்திய அரசு அலுவலகங்கள்? எதற்கு இந்தியத்துணை வல்லரசின் புகழ்பாடுகிற வானொலிகள்? தொலைக் காட்சிகள்? என்பனவே — நம் முன் உள்ள கேள்விகளாகும்.

ஆக, இந்தியத் துணைவல்லரசின் அதிகாரம் என்பதே தூக்கி எறியப்பட வேண்டியதாய்த் தமிழக மக்களுக்கு இருக்கிற போது,

இந்தியக் குடியரசுத் தலைவராகவோ, துணைக் குடியரசுத் தலைவராகவோ பார்ப்பனர் வந்தால் என்ன பறையர் வந்தால் என்ன?

அ்து உரிமையன்று. அது விடுதலையுமன்று. அடிமைத் தனத்துக்குப் பூட்டப்படும் பொன் விலங்கே ஆகும்.

இன்றைய அளவில் அனைத்து இன மக்களையும் அடிமைப் படுத்தியுள்ள இந்தியத் துணைவல்லரசை எதிர்த்துப் போராடி ஒவ்வோர் இன மக்களும் பெறவேண்டிய அரசியல், குமுகியல், பொருளியல் விடுதலையே — அவ்வகையான தமிழ் நாட்டு விடுதலையே உண்மை விடுதலையாகும்.

தனித் தமிழ்நாடே தம் உயிர் மூச்சென பெரியார் அவர்கள் தம் இறுதிக்கால கட்டத்தில் கூட பறைசாற்றி விட்டுப் போனார்கள்.

"The problem of Political rights is more important than the problems of temple entry, and therefore it is unwis and dangerous to deviate from that work"

(—Life and misson of Ambedkar P. 197.)

"The capture of political power is far-more important than organising trade unions." (ibid — P. 365.)

"Without political and economical Power the harijans will find it hard to attain social equality" (ibid — P. 345.)

— என்று அம்பேத்கார் அவர்கள் தெள்ளத் தெளிவாக அரசியல் உரிமை, அரசியல் அதிகாரம் பெறாமல் விடுதலை என்பதே இல்லை. மற்ற அனைத்தும் அதைத்திசை மாற்றுவதே என்று வரையறுக்கிறார்.

ஆக, தமிழனுக்கு அரசியல் உரிமை மிக மிக இன்றியமையாதது. அ்து இல்லாமல் நம்முடைய அடிமைத்தனம் நீங்கவே நீங்காது. நீங்கவும் முடியாது. என்பதில் நாம் தெளிவாக வேண்டும்.

ஆக, தமிழன், தன்னைத் தமிழனாக எண்ணித் தன்னுடைய விடுதலைக்காக அனைத்து அக முரண்பாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் போராட வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட ஏழையோ, தாழ்த்தப்பட்ட ஏழையோ, உழவர்கள் என்கிற நிலையில் ஒன்றிணைக்கப்பட்டு, உழவர்கள் எவ்வாறு இந்திய ஆளுமையால் தாக்கப்படுகின்றனர்; சுரண்டப்படுகின்றனர்; ஏழையாக்கப் படுகின்றனர் — என்பது விளக்கப்படுத்தப்பட்டு அதற்கெதிராகப் போராட வேண்டும்.

அவ் வகையில் அவ்வகை ஏழை மக்கள் கூலிகளாக இருந்து என்னென்ன தாக்கத்துக்கு உள்ளாகின்றனர் என்பது விளக்கப் படுத்தப்பட வேண்டும்.

நெய்வேலி, சேலம், திருச்சி போல இடங்களில் தொழிலகங்களுக்காக இடம் பிடுங்கப்பட்டது. தொழிலகத்தில் தமிழனுக்கு வேலைவாய்ப்பு இல்லை. எல்லாம் வட நாட்டானிடம் தான் உள்ளது. அவர்களை அங்கிருந்து விரட்டுவது, நரிமணம் கன்னெய் (பெட்ரோல்) தூக்கிக் கொண்டு போவதைத் தடுப்பது, இத் தமிழ்மக்கள் உழைத்த உழைப்பின் விளைச்சல் பொருள்கள், வன்னியன் உழைத்தது என்றோ, பறையன் உழைத்தது என்றோ பிரிக்கப்படாமல், மொத்தத்தில் சுரண்டப்பட்டு இந்திய அரசால் எடுத்துச் செல்லப் படுவதை பிடுங்கி நமக்காக்குவது,

அனைத்து ஊட்டி நிலங்களும் டாட்டாவிற்குப் பறிபோய்விட்டதைப் பிடுங்கி தமிழர்க்காவது, சென்னையில் பாதி பகுதி மார்வாடி சேட்டுக்குப் போய் விட்டதைக் கண்டு அவர்களை விரட்டுவது, தூத்துக்குடி — உப்பு — டாட்டாவிற்குப் பறிப்பதைக் காப்பது, நெய்வேலி நிலக்கரி — வடக்கே கொண்டு செல்லப் படுவதைத் தடுப்பது, நெய்வேலி, கல்பாக்கம், எண்ணூர் மின்சாரங்கள் திருடப்பட்டுக் கொண்டு செல்லப்படுவதைப் தமிழர்க்கெனப் பிடுங்குவது,

— இவை போல் அனைத்தும் இத் தமிழ் மக்களுக்கே என விளக்கப்படுத்தப்பட்டுத் தமிழ் மக்கள் என்கிற ஒருமை உணர்வை ஏற்படுத்துவோம்!

அவர்களுக்குள் பகுக்கப்படுகிற சாதியச் சிந்தனைகளை அறுத்தெறிவோம்! அனைவரும் வகுப்புரிமைக்குப் போராடுவதைத் தவிர்ப்போம்! தமிழ் மக்களின் ஒட்டுமொத்த விடுதலைக்கே போராடுவோம்! வாருங்கள் அனைவரும், ஒன்றிணைந்த தமிழர்களாக!

0

**அன்பர்கள் கவனிக்க!**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வகையில் ஒரு தீர்வைக்காண்பது மட்டுமே இந்திய ஒன்றியத்தின் வடமேற்கு மற்றும் வட-கிழக்குப் பகுதிகளில் எழுந்துள்ள தேசிய இனச் சிக்கல்களுக்கும் தீர்வு காண்பதாக அமையும் எனவும் நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எனவே இந்திய ஒருமைப்பாட்டின் மீதும்,குடி நாயகத்தின்மீதும் அதிக அக்கறையுள்ள தாங்கள் இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, ஒன்றியத்தின் பாதுகாப்பு நலன் வேண்டி, உடனடியாகத் தாங்கள் கையொப்பம் இட்டுக்கொண்ட இந்திய - இலங்கை உடன்பாட்டை நீக்கம் செய்ய வேண்டியும், ஈழத்தில் இயங்கும் இந்தியப்படைகளை எவ்வகை ஏற்பாடும் இன்றித் திருப்பியழைக்கவேண்டியும், தற்போது தாங்கள் செய்துள்ள 59-ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தையும் நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

இல்லையேல், இத்தகைய நிலைமைகள் தொடர்ந்து நீடிக்குமாயின், இந்திய ஒன்றியத்தில் எம்மோடு இணைந்துள்ள மக்களின் பாதுகாப்புக் காகவும், தற்போது தாங்கள் கொண்டு வந்துள்ள 59-ஆவது திருத்த "இந்திய அரசின் கொடுங் கருப்புச் சட்டத்தை" எதிர்த்தும், தமிழகத் தமிழர் களாகிய நாங்கள் ஒரு தேசிய இன மக்கள் எனும் அடிப்படையில், எமக்குள்ள குடிநாயக அரசியல் உரிமைகளை மீட்டுக் கொள்ளவும், எமக்குள்ள தன்னுறுதி உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று '**தமிழகத் தனியரசைக்**' கட்டியமைத்துக் கொள்ளவும், வேண்டித் தங்களின் தலைமையிலுள்ள இந்திய நடுவண் அரசை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை உருவாக்கப்படும் என்பதையும் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

எனவே இந்திய ஒருமைப்பாட்டின் மீதும் குடிநாயகத்தின் மீதும் ஆழ்ந்த அக்கறையுள்ள தாங்கள் மேற்கூடிய வகையில் - இலங்கை உடன் பாட்டை நீக்கம் செய்தும், இந்தியப் படைகளை இந்தியாவிற்குத் திருப்பியழைத்தும், 59-ஆவது திருத்தத்தையும் நீக்கம் செய்தும், இந்திய அரசிய லமைப்பினைத் திருத்தியும் இந்திய ஒன்றியத்தின் பாதுகாப்புக்கும், இந்தியாவில் இணைந்துள்ள தேசிய இனமக்கள் குடிநாயக உரிமைகளுடன் வாழவும் உதவுவீர்கள் என்றும் நம்புகிறோம். நன்றி.

தமிழக மக்கள் விடுதலைக் கழகம்,
தமிழ்நாடு.
(நன்றி: '**வேட்கை**' — மே' 88)

---

பஞ்சாப் மக்களின் அரத்தத்தை குடிக்கும் இந்தியப் படையின் கொலை வெறியை முறியடிக்கவும், தமிழீழ மக்களின் விடுதலைக்கு ஆதரவாகவும் அனைத்துத் தேசிய இன மக்களும் நடுவண் அரசை உடைத் தெறியப் போராடுவோம்.

---

## சாதியுணர்வுகள் வளர்கின்றன!

அண்மையில் சென்னையில் அனைத்துச் சாதி களுக்கான ஒதுக்கீட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி பல சாதிச் சங்கங்கள் ஓர் உண்ணா நோன்புப் போராட்டத்தை நடத்தின.

அச் சங்கங்கள் சார்பில் வெளியிட்டிருந்த விளம்பரத்தில், அவ்வுண்ணாநோன்புப் போராட்டத்தில் கலந்து கொள்வதாக அறிவிக்கப் பட்டிருந்த சாதிச் சங்கங்களும் அவற்றின் பொறுப்பாளர்களும் வருமாறு: (பெயர்களை அறிக்கையிலிருந்தவாறே வெளியிடுகிறோம்.)

"**தேவர் பேரவை** நிறுவனர் டாக்டர் வி. ராமகிருஷ்ணன், **வன்னியர் சங்க** நிறுவனர், டாக்டர். ச. இராமதாஸ், வன்னியர் சங்கத் தலைவரும் கூட்டமைப்புத் தலைவருமான சா. சுப்பிரமணியன், **ஷெட்யூல்டு கேஸ்ட் பெடரேஷன்** தலைவர் டேவிட் அம்பேத்கார், **முக்குலத் தேவர்** முன்னணி சார்பில் கூட்டமைப்பின் பொருளாளர் நகைமுகன் ராமச் சந்திரன், **யாதவ மகாசபைப்** பொதுச் செயலாளர் பேராசிரியர் கலைமணி, **விஸ்வகர்ம மகாஜன சங்க** பொதுச் செயலாளர் ஏகாம்பரம், **நாடார் சங்கம்** சார்பில் பாண்டியன், **வண்ணார் சங்கத்** தலைவர் கோபால், **நாவிதர் சங்கம்** சார்பில் மோகன், **முத்தரையர் சங்கம்** சார்பில் வெங்கிடசாமி, **குலாலர் பேராயம்** தியாகராஜன், **பார்க்கவ குல சங்கம்** சார்பில் வழக்கறிஞர் ராஜன், **உரிக்கார நாயக்கர்** சங்கத் தலைவர் பழனிச் சாமி, **முதலியார் சங்கம்** சார்பில் செல்லப்பா, **நரிக் குறவர் சங்கப்** பொதுச் செயலாளர் செல்வி. இந்திரா காந்தி - மற்றும் பல் வேறு சகோதர சங்கப் பிரதிநிதிகள் உண்ணாவிரதத்தில் பங்கேற்கின்றனர்."

**ஐயோ தமிழே! ஐயோ தமிழரே!**

இருட்டறையில் உள்ளதடா உலகம்! - சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!
உருப்படி யாகாதடா - தமிழா
உருப்படி யாகாதடா - தமிழகம்
உருப்படி யாகாதடா!

தெருப்படியிறங்கினால் குலமதச் சண்டைகள்!
திரிவோர்தம் வாயெலாம் அரசியல் புரட்டுகள்!
உருப்படி யாகாதடா - தமிழகம்
உருப்படி யாகாதடா! 0

---

## கோண்டுவானாக் கொள்கை.

ஏறத்தாழ இருபது கோடி ஆண்டுகளுக்கு முன்னர் கோண்டுவானா நிலப்பகுதியானது சிதைவுற்றுத் தனித்தனிக் கண்டங்களாகப் பிரிந்தது; தற்போது உள்ள ஆத்திரேலியா, அண்டார்க்டிகா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா இந்தியா முன்பு இணைந்து கோண்டுவானா கண்டமாக விளங்கின.

பேரா. **எம். இராவிச்**. சோவியத்து நிலவியலார்.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறை கூறிக் கொண்டு, தம் திரண்ட சொத்து நலன்களை எவ்வாறேனும் காத்துக் கொள்வதற்காக அரசியல் பேச்சுப் பேசித் திரியும் மூப்பனார், இறுதிக் காலத்தில் தம் குருவானவர்க்கு ஏற்பட்ட ஏமாற்றங்களையும் இழிவுகளையும் எண்ணிப் பார்த்துக் கொள்ள இப்பொழுதே சொல்லி வைக்கிறோம். அரசியல் சூறாவளியில் அடி மேலாகவும், மேல் கீழாகவும் புரட்டப்பட்ட பெருந்தலைவர்கள் ஏராளம்! ஏராளம்! அதற்கு மூப்பனாரும், சிதம்பரமும் மட்டும் நெறிவிலக்கானவர்களாக இருந்துவிட முடியாது. அவதூறு சட்டத்தைத் தம் ஆண்டை இராசீவின் தூண்டுதலால் தாம் சட்டாம் பிள்ளையாக இருந்து அறிவித்து விட்டு, இராசீவுக்கு வந்த அளவற்ற கடுமையான எதிர்ப்புகளால், எய்தவனின் அம்பாக 'அம்போ' என்று வீழ்ந்து கிடக்கும் அவரின் அவல நிலையை அவர் உணர்ந்து கொள்ளாத அறிவற்றவர் என்று கீழ்மையாக நாம் நினைத்து விடவில்லை. ஆனாலும் வடவாரியர்களை நம்பிய எவனும் இத் தமிழினத்தில் தலையெடுத்ததும் இல்லை; தலைதப்பியதும் இல்லை. மிக மிகத் தூய்மையான அரசியல் காரர்களான வ. உ. சி., திரு. வி. க. போன்றவர்களும் கூட இந்நிலையைத் தங்கள் இறுதிக் காலத்தில் உணர்ந்து நெஞ்சு நோகவே செய்தார்கள் என்றால் இப்பொழுதுள்ளவர்கள் எம்மாத்திரம்?

அடுத்து வரும் தேர்தலில் இந்திராப் பேராயம் ஆயிரங்கோடி உருபா முதலீடு (செலவு) செய்யவிருக்கிறதாக அனைவரும் கூறி வருகின்றனர். சில காலத்திற்கு முன் அரசியலோடு அறவியல் கைகோத்திருந்தது. ஆனால், இக்கால் உலக முழுவதும், அறிவியலும் கை பிணைந்து மக்களை ஆட்டக் களமாக்கி வருகின்றன. இனி அறம் செல்லாது; பேச்சு எடுபடாது; கருத்துகள் வெல்ல முடியாது; நேர்மை, நயன்மை, உண்மை எதுவுமே முன்வர இயலாது. போலித்தனமும், பொய்ம்மையும், ஆரவாரமும், அடாவடித் தனமும், அரம்பச் செயல்களும், பணமும், படையுமே வெற்றி பெற முடியும். நன்றாக எண்ணிப் பாருங்கள்!

இந்நிலையில் தமிழீழத்தில் தமிழின மக்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றனர். தமிழகத்திலும் ஆளுநர் ஆட்சியினால் அவர்கள் பாடு வெகு திண்டாட்டமாக இருந்து வருகிறது. அனைத்து நிலையிலும் இங்குள்ள தமிழ் மக்கள் அரசியல், பொருளியல், குமுகவியல், கலை,பண்பாட்டு உரிமைகளை இழந்து, ஏற்கனவே அடிமைப்பட்டுக் கிடப்பதுடன், இன்றும் பேரவலத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எதிர்காலம் இவர்களின் நிலையில் எப்படியிருக்குமோ என்று உய்த்துணர இயலாது.

இங்குள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் இந்த அழிவு நிலைகளை முற்றும் உணர்ந்திருக்கிறார்கள் எனினும், தங்களுக்குள் அனைத்து நிலைகளிலும் வேறுபட்டும், மாறுபட்டும் ஒருவரை ஒருவர் அமுக்கிக் கொண்டும் அழித்துக் கொண்டுமே கிடக்கின்றனர். ஆனால் அனைவரும் வடவாரிய வணிகக் கூட்டு அரசியலின் கீழ்மைத் தனங்களையும், வஞ்சகங்களையும், தமிழின அழிப்பையும் உணர்ந்தே உள்ளனர். எனினும் அவர்கள் ஒன்றுபட்டு, அவர்களை எதிர்க்கும் ஆற்றலை இழந்தே உள்ளனர். இவ்வழுங்கல் நிலையில் அவர்களுக்கு நாம் மிகவும் வருத்தத்துடனும் அன்புடனும், வேண்டுதலாகக் கூறுவது இதுதான்.

நீங்கள் அனைவரும் இக்கால் உள்ள இழிவான அரசியல் நலன்களைத் தூக்கி எறியுங்கள்! வேற்றுமையை அகற்றுங்கள்! தில்லி ஆட்சி என்றென்றும் நம்மையும் நம் பிறங்கடைகளையும் மீளாத கொத்தடிமையாகவே வைத்திருக்கும். நம்மில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் அவர், அவர்களுக்கு முழு அடிமையாக இருக்கிற வரையிலேயே அவர்கள் உங்களைப் பாராட்டி ஏற்றுக் கொள்வார்கள். உரிமை நிலையிலோ, ஒத்துழைப்பு நிலையிலோ நீங்கள் அவர்களில் யாரேனும் ஒருவர்க்கு மாறுபட்டாலோ, வேறுபட்டாலோ, உங்களை உடனே கீழிறக்கி விட்டுவிட்டுச் சட்டத்திற்குப் புறம்பாகவே, அவர்களே நேரடியாக ஆட்சி நடத்தத் தயங்க மாட்டார்கள். இது இமயமலை போன்ற வரலாற்று உண்மையாகும். எனவே, தமிழ்நாட்டுத் தேசிய இன விடுதலையே தமிழினத்தின் ஒட்டுமொத்தமான உரிமை அரசியலை உங்களுக்கு மீட்டுக் கொடுக்க முடியும்.

ஆகவே, நீங்கள் அனைவரும் நமக்குள் என்றென்றும் நிலையாக இருந்துவரும் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து விட்டு, முழுமையான இனவுணர்வுடனும், நம் தாய்மொழி உணர்வுடனும், தமிழ்நாட்டு விடுதலை உணர்வை நம் மக்களிடையே ஊட்டுதல் ஒன்றே இந்நூற்றாண்டுக்கு உரிய தலையாய கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

இந்தக் கொள்கை நோக்கை அடிப்படையாகக் கொண்டே நம் கலைஞர் கருணாநிதி, மானமிகு வீரமணி, மாவீரன் நெடுமாறன், மக்கள் நலன் கருதும் கலிவரதன், நெடுஞ்செழியன், சானகி இராமச்சந்திரன், சோமசுந்தரம், காளிமுத்து, இரா. செழியன், இந்திராப் பேராயத்திற்கு முற்றிலும் தம்மை கொத்தடிமையாக் கொண்டவர்கள் போக எஞ்சியுள்ள தமிழின முன்னோடிகள் முதலிய அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குரலில் தமிழக விடுதலைக்குக் குரல் கொடுக்குமாறு, இன்றுவரையிலும் இனியும் கூட எந்த வகையிலும் அரசியல் நலனோ பிற எவ்வகை வாழ்வியல் நலனோ கருதாத, ஒரு தமிழின நலத் தொண்டன் என்ற முறையில், மிகவும் பணிவன்புடனும் அறிவார்ந்த உள்ளுணர்வுடனும் வேண்டிக் கொள்கின்றேன். 0

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை. அடிக்கடி வரவேண்டும் என எண்ண வேண்டாம். நிறைய செலவு ஆகும்.

நான் இம் மடலை எழுதிக் கொண்டிருக்கும் போதே, அருளி மாமா அவர்கள் அனுப்பிய மடல் கிடைத்தது. அவரின் பணியழுத்தம் பற்றியும், எங்களின் நலம் பற்றி உசாவியும் எழுதியிருந்தார்.

22-ஆம் பக்கல் கொடைக்கானலுக்கு மிக மகிழ்வுடன் சென்று வந்தோம். முன்பு போல் தொடரீ (இரும்புச் சங்கிலி) போடுவதில்லை. கை விலங்கு மட்டும் தொடக்கத்தில் போடுகின்றனர். பின்னர் எங்கள் மீது நம்பிக்கை கொண்டு அதையும் அவிழ்த்து விடுகின்றனர். இளங்கோவிற்கு உடல் நலமாக உள்ளது. எங்கள் விடுதலை பற்றியெல்லாம் எண்ணுதீர்கள். அ்து அவ்வளவு எளிதாக இருப்பதாக நாங்கள் எண்ணவில்லை. நீங்கள் மகிழ்வுடன் இருக்கவும். அப்பாவிடம் எந்த மன முரணும் கொள்ள வேண்டாம். அமைதியாக அன்பாகப் பேசுங்கள். பிற பின்னல் எழுதுகிறேன்.

அன்புப் பிறை! உன் மடல் கிடைத்தது. வர வர உன் எழுத்து நன்ருகவும் பிழைகள் குறைவாகவும் உள்ள நிலையில் எழுதத் தொடங்கியுள்ளாய். நிறைய நீ எழுதுவதால் அந்த முன்னேற்றம். நீ இளைத்திருப்பதாகவும், அப்பா அவர்கள் மிகவும் அமைதியாக — கவலை தோய்ந்த நிலையில் இருப்பதாகவும் செந்து எழுதியிருந்தாள். அப்பாவை மகிழ்வாகவும் எச்சரிக்கையாகவும் பேணுங்கள். நீ உடலைக் கவனித்துக் கொள்.

அக்கா அப்பாவிடம் பேசுகிருளா? இல்லையேல் பேச வை. தனிநலச் சிந்தனைகளையெல்லாம் நாம் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். நாட்டு நலனுக்காக நம் அக முரண்பாடுகளை யெல்லாம் வெட்டிச் சாய்க்க வேண்டும். எனவே அக்காவை அப்பாவிடம் பேசச் சொல். அக்கா நம் அச்சகத்திலேயே பணியாற்றலாம் என்று எழுதியது பற்றிச் சிந்திக்கவும்.

செம்மல் ஏன் அச்சகத்தைத் திறந்தபடியே விட்டு வந்து விட்டான்? அப்பா கண்டிப்பது. மன வருத்தமாக இருப்பினும், அதுதான் அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமே என்று அவன் உணரும் படி சொல். உடற் பயிற்சி செய்யச் சொல். உடலை நன்கு வளர்க்கட்டும். மனத்தை இறுகக் கட்டி வைக்காமல் அவிழ்த்து விட்டு, இயற்கை மனமாக, எவ்வகைக் கட்டுப் பாட்டிலும் தன் மனத்தைக் கட்டுப் போடாமல், நம் கொள்கைக்கான சிந்தனையில் மட்டும் அதிகம் சிந்தித்து வளர வேண்டும் எனச் சொல். மடல் எழுது. கிழமைக்கு ஒரு முறை எழுதவும்.

செந்து! உன் மடலுக்குத் தனியே சூழல் கிடைக்கும் பொழுது எழுதுகிறேன். மற்றபடி உன் மடலை அனைவரும் படித்து மகிழ்ந்தோம். மாமாவிற்குக் காய்ச்சல் சரியாகி விட்டதா? அவரை நலமுடன் பேணு. தென்மொழிக்குத் தொடர்ந்து ஏதேனும் எழுதிக் கொடு. அறிவைப்பெற்றுக் கொண்டு, நம் அறிவால் இவ்வுலகிற்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். டி.பி. எப்படியுள்ளது? அதற்கு ஆயிரம் முத்தங்கள். அதே குறும்பு அப்படியே இருக்கட்டும். மாமா அவர்கள் அப்பாவைப் போய்ப் பார்க்கிருரா? ஒவ்வொரு ஞாயிறும் நம் வீட்டிலேயே அனைவரும் ஒன்ருக இருந்து சாப்பிடவும். அப்பாவிற்கும் அம்மாவிற்கும் பிறைக்கும் அப்பொழுது மகிழ்வாக இருக்கும்.

அக்கா நலமுடன் இருக்க வேண்டுகிறேன், ஏன் மடல் எழுத வில்லை? கயல்! நன்ருகப் படி. அம்மும்மா, அம்மா அனைவர்க்கும் துணையாக இரு.

மற்ற எழுதுகிறேன். அண்ணன் உடல் நலம் பற்றியும் தெரிவியுங்கள். — **பொழில்.**

## பார்ப்பனர் இனப் பற்று'

23-10-86 — தினமணிக்கதிரில் ஒரு வினவும் விடையும்:

**வினு:** மணியாச்சி 'ரயில்' நிலையத்தின் பெயர் 'வாஞ்சி மணியாச்சி' என்று மாற்றப்படும் என்று பிரதமர் 'ராஜீவ்' அறிவித்துள்ளாரே!

**விடை:** பிரதமருக்கு நன்றி!

பார்ப்பனர் தம் இனத்துக்கு ஆக்கம் வருவதில் எவ்வளவு விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருக்கிருர்கள் பார்த்தீர்களா?

## அன்பர்களுக்கு ஒரு தெரிவிப்பு.

கடந்த பதினைந்தாண்டுக் காலமாக ஆசிரியர் குடியிருந்த சென்னை, திருவல்லிக்கேணி பகுதியிலிருந்து திருமயிலை சென்னை, மயிலா(ர்)ப்பூர் பகுதிக்கு வீடு மாற்றம் செய்த அந்தப் பேரிடர்ப் பாட்டாலும், அச்சகப் பணியாளர் சரிவர அமையாததாலும், வேறு இயல்பான முகவர்கள் வழியான தொல்லைகள் மிகுதிப் பாட்டாலும் — சென்ற மாதம் வெளிவர வேண்டிய தென்மொழி, தமிழ்நிலம் இதழ்கள் மிகக் காலந்தாழ்ந்து இக்கால் வெளிவர வேண்டியுள்ளன என்பதை மிகவும் மன வருத்தத்துடனும், ஆற்றுமையுடனும் தெரிவித்துக் கொள்கிருேம். அன்பர்கள் மிகவும் மனங்கனிந்து பொறுத்துக் கொள்ள வேண்டுகிருேம். இப்பொழுதுள்ள இடர்கள் நீங்கும் வரையில் தொடர்ந்து இந்நிலையே நீடிக்கும் என்பதையும் முன்னறிவிப்பாகத் தெரிவித்துக் கொள்கிருேம். ஆசிரியரின் புதிய இல்ல முகவரி:

12, துவாரகை குடியிருப்பு,
மயிலா(ர்)ப்பூர், சென்னை-4.

தென்மொழி அச்சகமும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் வெளியீட்டகமும், பழைய 5, அருணுசலத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 — என்ற முன்னைய முகவரியிலேயே இயங்கும். — **அமைச்சர்.**

Scanned with CamScanner

பாவலர் -- சின்னப்பனார், கொம்மக்கோவில்.

எழுவீர்! எழுவீர்! இன்றே எழுவீர்!
எழுந்தே விடுதலைப் போர்தொடுத் திடுவீர்.
"தொழுதே இனிமேல் வாழோம்" என்றே
சூளுரைத் தேநீர் கிளம்பிடு வீரே!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
ஆரியர், வடவர்க் கடிமைக ளாக
மாயிருந் தரையில் நமதினம் போல
வாழ்ந்திடும் இனந்தான் உண்டோ? சொல்வீர்!

இல்லை எந்த இனமும் இல்லை;
இப்படி நம்போல் இழிந்தவர் இல்லை;
சொல்லவும் வெட்கம்! எழுதவும் வெட்கம்!
துடைக்க யிவ்விழிவைத் துடித்தெழு வீரே!

முன்னர்க் குமரிக் கண்டம் தன்னில்
வாழ்ந்தோம் சிறப்பாய்; ஆண்டோம் அதனை!
பின்னர் இந்த நாவலந் தீவைப்
பெரும்புக ழோடாண் டேவாழ்ந் தோமே!

அன்றிம் மண்ணை ஆண்டிட் டவரா
இன்றிங் கிடையில் வந்தவர்க் கடிமை?
வென்றே வடவரை மீட்டிட நாட்டை
வீறுகொண் டேநீர் கிளம்பிடு வீரே!

இனங்களின் எழுச்சிக் காலம் இதுவே!
ஏற்றநற் காலம் நமக்கும் இதுவே!
மனத்தில் இதனைப் பதித்திடு வீரே!
மறத்தமிழ் இளைஞரே! கிளம்பிடுவீரே!

இந்தக் காலம் தனைவிட் டிட்டால்
இனவிடு தலைதான் குதிரைக் கொம்பே!
செந்தமிழ் நாட்டை மீட்டிடும் போர்க்கே
சிலிர்த்தே கனைத்தே கிளம்பிடு வீரே!

ஈழத் திளைஞர் புலிப்படை போன்று
இங்கும் விடுதலைப் படையைத் திரட்டி
வேழம் என்னப் பிளிறிக் கிளம்பி
வடவரின் தலைகள் மிதித்திடு வீரே!

சிறுத்தை வேங்கை சீயம் எனவே
சீறிப் பாய்ந்தே அடிமைத் தளையை
நொறுக்கி யெறிந்தே நந்தம் நாட்டை
நமதாய் ஆக்கக் கிளம்பிடு வீரே!

காழ்ப்புணர் வாலே நம்மினம் அழிக்கும்
கயவர் கொடியர் வடவல் லரசை
வீழ்த்தித் திமிரை செருக்கை அடக்கும்
வெற்றிப் போர்செயக் கிளம்பிடு வீரே!

இத்தரை தனில்நம் மூதினத் திற்கே
இல்லை ஓரர செனும்நிலை மாற்ற
முத்தமிழ் இளைஞரே! திரண்டிடு வீரே!
மூச்சிதற் கென்றே கிளம்பிடு வீரே!

---

...த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 30**

...ரி எந்தெந்த நிலையில் வலிவு பெற்றிருக்
...ருனே, அந்தந்த நிலையில் நம்மைவளர்த்
... கொண்டால்தான், வெற்றிபெறமுடியும்

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 112.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5. அருணாசலத் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5;

TN/MS (C) 657